பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 12 2025 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. இந்தியா — நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மைல்கல் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சர்வதேச சிவில் விமான போக்குவரத்து கவுன்சிலில் இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

3. சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம் மற்றும் கேரளா மாநிலத்திலும், அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்திலும் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

4. ஒடிஷா மாநிலம் மல்கான்கிரி மாவட்டத்தில் 22 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. இந்தியா — இலங்கை இடையேயான இரண்டாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் சற்றுமுன் தொடங்கியது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

இந்தியா — நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மைல் கல்லாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் எழுதிய கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், முதன் முதலாக பெண்கள் தலைமையில் இந்தியா இந்த வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

இந்தியா இதுவரை மேற்கொண்ட தாராள வர்த்தக ஒப்பந்தங்கள், வரி குறைப்பு மட்டுமின்றி, வேறு பல சலுகைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு மட்டுமின்றி லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

திரு கோயல் எழுதியுள்ள கட்டுரையில், இந்திய வர்த்தகம் பெரிய அளவில் முன்னேறியிருப்பதாகவும், சிறு வர்த்தகர்கள், பெண்கள், விவசாயிகள், இளைய சமுதாயத்தினர் உள்ளிட்ட பலதரப்பட்ட மக்களுக்கும் ஏராளமான வாய்ப்புகளை வழங்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய வேலைவாய்ப்புகளையும் தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் நிறைவேற்றி தருவதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளதையும் பிரதமர் தமது பதிவில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

சர்வதேச சிவில் விமான போக்குவரத்து கவுன்சிலில் இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சர்வதேச விமான போக்குவரத்து கவுன்சில் அளிக்கும் சேவைகள் அனைத்து நாடுகளுக்கும் கிடைக்கும் வகையில் இந்தியா அதற்கு ஆதரவு அளித்து வருவதாக கூறியுள்ளார்.

வளர்ந்து வரும் நாடுகளின் உற்றத் தோழனாக இந்தியா விளங்குவதாக தெரிவித்த திரு ராம்மோகன் நாயுடு, சர்வதேச விமான கவுன்சிலின் தர நிர்ணயம் மற்றும் பரிந்துரைக்கும் நடைமுறைகள் நாடுகளுக்கு இடையே நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி தொடர்பான புள்ளி விவரங்கள் துல்லியமானவைதான் என்று தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி அனந்த நாகேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பொருளாதார புள்ளி விவரங்கள் தொடர்பான பயிலரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சி குறித்த மதிப்பீடுகள் முறையாக நடத்தப்பட்ட புள்ளி விவர ஆய்வுகளின் அடிப்படையிலேயே இறுதி செய்யப்படுவதாக கூறினார்.

பொருளாதார மாற்றங்கள் விரைவாக ஏற்படுவதால் குறுகிய கால அடிப்படையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மதிப்பீடுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு சுமன் பெரி, சமூக வலைதளங்கள் மூலமாக பொருளாதார மதிப்பீடுகள் தொடர்பான புள்ளி விவரங்களை அளிப்பதில் நிபுணர்களுக்கு இடையே கருத்தொற்றுமை ஏற்படுவது அவசியம் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம் மற்றும் கேரளா மாநிலத்திலும், அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்திலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

சட்டீஸ்கரில் அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு யஷ்வந்த் குமார், வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டபின் எமது செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், ஒரு கோடியே 84 லட்சத்து 95 ஆயிரம் பேரிடமிருந்து கணக்கீட்டுப் படிவங்கள் பெறப்பட்டதாக கூறினார்.

மத்தியப்பிரதேச மாநிலத்திலும் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அம்மாநிலத்தில் உள்ள 230 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் பட்டியல் வெளியாகியுள்ளது.

கேரளா, அந்தமான், நிக்கோபார் பகுதிகளுக்கும் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ்தவான் ஏவுதளத்திலிருந்து LVM3 ராக்கெட் மூலம், அமெரிக்க நிறுவனத்தின் Blue Bird — Block-2 தகவல் தொடர்பு செயற்கைக்கோள் நாளை காலை மணி 8.54-க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இந்தியாவின் சக்திவாய்ந்த LVM3 ராக்கெட்டின் ஆறாவது பயணத் திட்டம் நாளை தொடங்குகிறது.

குறைந்த செலவில் வர்த்தக ரீதியாக செயற்கைக்கோள்களை அனுப்பும் முயற்சியில் இந்த ராக்கெட் சாதனை படைத்துள்ளது.

**Blue Bird — Block-2** செயற்கைக்கோள் நான்கு ஜி, ஐந்து-ஜி சேவைகளை ஸ்மார்ட் போன்களில் வழங்குவதற்கு உதவிடும் என்றும், தூரப்பகுதிகளிலும் செல்போன் சேவை தடையின்றி கிடைப்பதற்கு இது வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**AST Space Mobile** என்ற அமெரிக்க நிறுவனத்தின் இந்த செயற்கைக்கோள் அவசரகால தகவல் பரிமாற்றத்திற்கும் உலகளாவிய தகவல் தொடர்பு சேவையை வழங்கும் பணியையும் மேற்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ளது.

உலக விண்வெளி சந்தையில் நம்பிக்கை மிகுந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதை இந்த பயணத்திட்டம் உறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திரு. ராகுல் காந்தி, வெளிநாடுகளில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. **Shahzad Poonawala,** இந்தியாவுக்கு எதிராக போதிய ஆதாரமின்றி திரு. ராகுல் காந்தி பேசி வருவதாக குறை கூறினார்.

இந்தியாவின் உற்பத்தி துறை பாதிப்படைந்தள்ளதாக திரு. ராகுல் காந்தி கூறியதை மறுத்துள்ள அவர், இத்துறை வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மின்னணு உற்பத்தி துறையில் இந்தியா, **6** மடங்கு வளர்ச்சி கண்டுள்ளதாகவும், மின்னணு பொருட்களின் ஏற்றுமதி **8** மடங்கு அதிகரித்துள்ளதாகவும் திரு. **Shahzad Poonawala** கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

மத்திய அரசின் அஞ்சல் துறை சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துரையில் தமிழகத்தின் முதலாவது **N-Gen** அஞ்சலகம் இன்று தொடங்கப்பட்டது.

தனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மின்னணு முறையில் மாணவர்களுக்கு அஞ்சல் சேவைகள் **N-Gen** அஞ்சலகம் மூலம் வழங்கப்படுவதாக அஞ்சலக மேற்கு மண்டல இயக்குனர் திரு அகில் நாயர் தெரிவித்தார்.

***(Sound Byte — அகில் நாயகர் — 49 Sec. )***

<<<<<>>>>>>

ஒடிஷா மாநிலம் மல்கான்கிரி மாவட்டத்தில் **10** பெண்கள் உட்பட **22** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

அம்மாநிலத்தின் காவல்துறை தலைவர் திரு குரானியா முன்னிலையில் இவர்கள் சரணடைந்தனர்.

அப்போது உரையாற்றிய அவர், சரணடையும் நக்சலைட்டுகள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், தற்போது கூடுதலான சலுகைகளை மாநில அரசு வழங்குவதாக தெரிவித்தார்.

அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இது பெரிதும் உதவிடும் என்றும் திரு குரானியா கூறினார்.

<<<<<>>>>>>

தாய்லாந்துடனான போரில் கம்போடியா எல்லையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை **21**ஆக அதிகரித்துள்ளது.

தாய்லாந்து ராணுவம், கம்போடிய நாட்டு குடிமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இதுவரை **21** பேர் உயிரிழந்துள்ளதாக கம்போடிய ராணுவ செய்தி தொடர்பாளர் லெப்டினெட் ஜென்ரல் திருமதி **Maly Socheata** தெரிவித்துள்ளார்.

கம்போடியா - தாய்லாந்து இடையேயான போர், கடந்த 7ஆம் தேதி மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், எல்லைப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம் 5 லட்சத்து 45 ஆயிரம் கம்போடிய மக்கள் எல்லைப்பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், இருநாடுகளுக்கு இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த ASEAN வெளியுறவுத்துறை அமைச்சர்கள், மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஆலோசனை மேற்கொண்டனர்.

<<<<<>>>>>>

சோமாலியாவில் கடந்த செப்டம்பர் மாதம் தொடங்கி இதுவரை ஒரு லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா கூறியுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — இலங்கை இடையேயான இரண்டாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

**விசாகப்பட்டினத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.**

**இதனையடுத்து பேட் செய்துவரும் இலங்கை ஐந்து புள்ளி ஐந்து ஓவரில் 2 விக்கெட் இழப்பின்றி 38 ரன் எடுத்துள்ளது.**

**----------**

**மகாராஷ்ட்ரா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishnavi Adkar — அங்கிதா ரெய்னா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**<<<<<END>>>>>>**